# அரையாண்டுத்தேர்வு - 2019

## மேல்நிலை முதலாம் ஆண்டு – பொதுத்தமிழ்

**பகுதி–1** **(14 x 1 = 14)**

1. ஈ) இவை அனைத்தும்
2. இ) 27
3. ஆ) 1– (iii),2-(i),3-(iv),4-(ii)
4. ஆ) பவனந்தி முனிவர்
5. ஆ) அண்ணாமலையார்
6. இ) மக்கள் வெள்ளம்
7. ஆ) பண்புத்தொகை
8. ஆ ) அகவலோசை
9. இ) தொடுதிரை
10. இ) ய்,வ்
11. இ) தாகூர்
12. அ) மகிழ்ச்சி
13. ஆ) அடுக்குத்தொடர்
14. இ) ஜெயமோகன்

**பகுதி – II**

**எவையேனும் மூன்றனுக்கு மட்டும்.** **(3 x 2 = 6)**

15. **இனம், மொழி குறித்த இரசூல் கம்சதோவ் பார்வை :**
   - "தன் இனத்தையும் மொழியையும் பாடாத கவிதை, வேரில்லாத மரம்; கூடில்லாத பறவை"
16. **மதீனா நகரம் ஒரு மாளிகை நகரம் :**
   - மேருமலை போல் மதீனா நகரின் மேல்மாடங்கள் உயர்ந்திருந்தன.
   - அங்காடிகள் நிறைந்த தெருக்களில் எழுந்த பேரொலி, பெருங்கடல் போல் இருந்தது.
   - மதீனா நகரின் வீதிகள், பிரபஞ்சம்போல் பரந்து விரிந்திருந்தன.
   - அத்துடன் பெரிய மாளிகைகள் சிறிதும் இடைவெளியின்றி நெருக்கமாக அமைந்திருந்தன.
   - தோரணங்களும் கொடிகளும் கட்டப்பட்டுப் பொன்னகர்போல் பொலிந்தது.
   - அதனால், மதீனாநகரம், 'ஒரு மாளிகை நகரம்' என்பது உறுதிபட்டது.
17. **எண்ணச் சொல்கிறவர்கள்** : தாய்மொழியில் கற்பிப்போர்
   **எண்ணுபவர்கள்** : தாய்மொழியில் கற்போர்
18. உண்ட உணவு செறித்த பின் உண்டால் மருந்து தேவையியல்லை

**பிரிவு – 2**

**எவையேனும் இரண்டனுக்கு மட்டும்** **(2 x 2 = 4)**

19. **மசானுபு ஃபுகோகா கூறிய ஐந்து விவசாய மந்திரங்கள் :**
   - உழப்படாத நிலம்,
   - இரசாணய உரம் இல்லா உற்பத்தி,
   - பூச்சிக்கொல்லி தெளிக்கப்படாத பயிர்ப் பாதுகாப்பு,
   - தண்ணீர் நிறுத்தாத நெல் சாகுபடி,
   - ஒட்டுவிதை இல்லாமல் உயர் விளைச்சல்.
20. **ஆனந்தரங்கரின் வருணனைத் திறனுக்கு ஓர் எடுத்துக்காட்டு :**
   - "கப்பல்கள் வருகின்ற செய்தியைக் கேட்டதும் நஷ்டப்பட்ட திரவியம் மீண்டும் கிடைத்தாற் போலவும், மரணமுற்ற உறவினர்கள் உயிர் பெற்று எழுந்து வந்தது



Kindly send me your questions and answerkeys to us : Padasalai.net@gmail.com

போலவும், நீண்ட நாள் தவமிருந்து புத்திரப்பாக்கியம் கிட்டினாற்போலவும், தேவாமிர்தத்தைச் சுவைத்தது போலவும் மக்கள் சந்தோஷித்தார்கள்."

**21. தாமஸிகம்**

- நாகரிக வழக்கத்தில் காலத்துக்கு ஏற்றபடி சீக்கிரம் வாடிவிடும் மலர்களுடன் தொடர்பு உண்டு.
- தோட்டக்காரன் கைகளில் அவற்றைப் பாரமரிக்கும் பொறுப்பு இருக்கும். மலர்ச் செப்பினுள் வழக்கம்போல் போவதும் வருவதும்தான் அவற்றின் வேலை. இதனைத் 'தாமஸிகம்' என்பர்.

## பிரிவு – 3

**எவையேனும் ஏழனுக்கு விடை தருக. (7 x 2 = 14)**

22. மொழிக்கு முதலில் வரும் எழுத்துகள் 22. அவை

உயிர் எழுத்துகள் 12 (அ முதல் ஔ வரை)

மெய்யெழுத்துகள் –10 (க,ங,ச,ஞ,ந,ப,ம,ய,வ)

**23. பகுபத உறுப்பிலக்கணம்**

**அ) பிரிந்தோர் = பிரி + த் (ந்) + த் + ஓர்**

பிரி – பகுதி

த் – சந்தி "த்"– "ந்"ஆனது விகாரம்

த் – இறந்தகால இடைநிலை

ஓர் – பலர்பால் வினைமுற்று விகுதி

ஆ) துய்த்தல் **= துய் + த் + த் + அல்**

துய் – பகுதி

த் – சந்தி

தல் – தொழிற்பெயர் விகுதி

24. **புணர்ச்சி விதி :**

அ) நீரோடை = நீர் + ஓடை

விதி : "உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே"

ஆ) சிறுகோல் = சிறுமை + கோல்

விதி : "ஈறுபோதல்" (சிறு + கோல்)

**25. ஆக்கப்பெயர்கள்**

அ) நூலகம்

ஆ) வருமானம்

**26. விகுதிகள்**

- வியங்கோள்
- தொழிற்பெயர்
- பெயரெச்சம்
- வினையெச்சம் போன்ற பல்வேறு இலக்கணப் பொருண்மைகளை உணர்த்தும்.

**27. தொடரமைத்தல்**

- அறிவில்லாதவன் – பாலன்ஒரு அறிவில்லாதவன்
- அறிவில் ஆதவன் –கபிலன் அறிவில் ஆதவனாகத் திகழ்கிறான்

28. **பேச்சு வழக்கை எழுத்து வழக்காக மாற்றுதல் :**

- முயற்சி செய்தால் அதற்கேற்ற பலன் கிடைக்காமல் போகாது.

**29. ஒழுங்குபடுத்தி இரண்டு தொடர்களாக்குதல்**

- கோசல நாடு ஒரு சிறந்த நாடு

- கோசல மக்கள் மகிழ்ச்சியாக வாழ்ந்து வந்தனர்

**30. கலைச்சொல்**

அ) ஆவணம் ஆ) ஒப்பந்தம்

## பகுதி – III

### பிரிவு – 1

**எவையேனும் இரண்டனுக்கு மட்டும்** (2 x 4 = 8)

31. சு.வில்வரத்தினம் பாடத்தான் வேண்டும் என குறிப்பிடுவது:

- “என் அன்னையே! தலை ஒற்றி எடுத்தபோது நெற்றியில் படிந்த மண்ணின் அழகே! உன் பாதங்களை வழிவழி தொழுது வணங்கியவர், உழுதவர், விதைத்தவர், வியர்த்தவர்கெல்லாம் பயனாக நிறைமணி தந்தவளே! உனக்கு பல்லாண்டு, பல்லாயிரத்தாண்டு பாடத்ததான் வேண்டும்.
- ஒலிக்கும் கடலையும், நெருப்பு ஆற்றையும், மலை உச்சிகளையும் காற்றில் ஏறிக் கடந்து செல்லுமாறு கட்டளை இடும் பாடலை, தொன்மையான கபாடபுரம் போன்ற நிலப்பரப்புகளைப் பலி கொண்ட பிறகும் காலத்தால் அழியாத தொன்மையான செல்வங்களின் வலிமை சேருமாறு பாடத்தான் வேண்டும்.

**32. தமிழர்கள் புகழ், பழியை ஏற்றதாகப் புறநானூறு கூறுவது :**

- புகழ் : புகழ் வரும் என்றால் தம் உயிரையும் கொடுப்பர்.
- பழி : பழி வரும் என்றால் உலகம் முழுவதும் கிடைத்தாலும் ஏற்றுக் கொள்ள மாட்டார்கள்

**33. யானை புக்க புலம் போலத் தானும் உண்ணான் உலகமும் கெடுமே**

- **உவமை :** யானை புகுந்த நிலம் போல
- **பொருள்:** குறைவான நிலத்தில் விளையும் நெற்கதிர்கள் யானைக்குப் பல நாட்களுக்கு உணவானாலும், தானாகப் புகுந்து அந்த யானையே உண்டால் மிகுதியான உணவு வீணாகும். அதுபோல, அறிவுடை வேந்தன் வரி திரட்டும் முறையறிந்து மக்களிடமிருந்து வரி திரட்டினால் நாடு செல்வத்தைப் பெற்று சிறப்படையும். முறைதவறி செய்வானாகில் யானை புகுந்த நிலம்போல, தானும் உண்ணாது அவனைச் சுற்றியுள்ள நாட்டு மக்களும் துன்புறுவர்.

**34. வாய்காலின் சிறப்புகள்**

- சிறு வாய்க்கால், உணவு நல்கும் வயலுக்கு உபயோகப்படுகிறது; அலைகடலை மலையாகவும் மலையை அலைகடலாகவும் மாற்றிட நடக்கிறது; கூழாங்கற்களை நெறுநெறு என உராய்ந்து நுண் துகள்களாக்கிச் சிறு மணலாக்குகிறது. மேலும், தன் வலிமைக்குள் அடங்கிய புல், புழு அனைத்தையும் கொண்டு வந்து, காலத்தச்சன் கடலில் மலைக்கு வழங்குகிறது.
- மழையாகப் பொழிந்த பின், அருவியாய் இறங்கி, குகைமுகம் புகுந்து, பூமியின் வெடிப்புகளில் நுழைந்து, பொங்கி எழுந்து, சுனையாய்க் கிடந்து, ஊற்றாய்ப் பரந்து, ஆறாக நடந்து, மடுவாகக் கிடந்து, மதகுகளைச் சாடி, வாய்கால் வழி ஓடித் தான் பட்ட பாடுகளைக் கூறி , மேலும் இயன்றதைக் கொண்டுவருவதாக உறுதி கூறுகிறது.
- நீக்கம் இல்லா அன்பும், ஊக்கமும் உறுதியும் கொண்டு அனுதினமும் உழைக்கிறது என்று வாய்காலின் சிறப்புகள் குறிப்பிடப்பட்டுள்ளன.

### பிரிவு – 2

**எவையேனும் இரண்டனுக்கு விடை தருக.** (2 x 4 = 8)

**35. ஜீவாவின் பேச்சுநடை குறித்துச் சுந்தரராமசாமி கூறுவன :**

- ஜீவாவின் பாணி, இரவல் பாணியோ, கற்று அறிந்ததோ அன்று! ‘பேச்சுக்கலை’ என்பது ஜீவா பெற்ற வரம்!

- மக்கள் தரத்தை, அனுபவ அறிவை, பழக்க வழக்கங்களை, நம்பிக்கைகளைத் தெளிவாக அறிந்த ஒருவர், கூறவந்த செய்திகளைக் கலைநோக்கோடு அணுகி, கற்பனை கலந்த காலப்போக்கில் வெற்றிகரமாக அமைத்துக் கொண்ட பேச்சுநடை, ஜீவாவின் பேச்சுநடை!
- உழுது விதைத்தால் நல்ல அறுவடை காணமுடியும் என்பதை உணர்ந்தவர் ஜீவா!

**36. ஃபிரஸ்கோ ஓவியங்கள்; கற்றளிக் கோவில்கள் :**

**ஃபிரஸ்கோ ஓவியங்கள் :**

- 'ஃபிரஸ்கோ' என்னும் இத்தாலியச் சொல்லுக்குப் 'புதுமை' என்று பொருள்.
- சுண்ணாம்புக் காரைப்பூச்சு மீது, அதன் ஈரம் காயும்முன் வரையப்படும் பழைமையான ஓவியக் கலைநுட்பம்.
- ஃபிரஸ்கோ வகை ஓவியங்களை அஜந்தா, எல்லோரா, சித்தன்னவாசல் முதலான இடங்களில் காணலாம்.
- **கற்றளிக் கோவில்கள்** :
- செங்கற்களை ஒன்றன்மேல் ஒன்றாக அடுக்கிக் கோவில் கட்டுவது போல், கருங்கற்களை அடுக்கிக் கோவில் கட்டுவது 'கற்றளி' எனப்படும்.
- மகாபலிபுரம் கடற்கரைக்கோவில், காஞ்சி கைலாசநாதர் கோவில், பனைமலைக் கோவில் ஆகியவை சான்றுகளாகும்.

**37. 'மலை, மனித வாழ்வில் சிறப்பிடம் பெற்றுள்ளது' :**

- மனித சமூகத்தின் ஆதிநிலம் மலை.
- மலைநிலத்தைத் தமிழ் இலக்கியம் 'குறிஞ்சி' என்றே குறிப்பிடுகிறது.
- திராவிடர்களைக் கமில் சுவலபில் 'மலைநில மனிதர்கள்' என்கிறார்.
- இந்திய பழங்குடியினர் பெயர்கள் மானுடப் புவிச்சூழலை வெளிப்படுத்துகின்றன.
- பழங்குடியினர் உயரமான இடத்தில் ஓடும் சிற்றாறு, ஓடைகளை ஒட்டிக் குடியிருப்பை அமைத்துள்ளனர்.
- அவை பழங்குடியினரின் மலைசார்ந்த சமூக சமயக் கூறுபாடு சார்ந்த புரிதலைத் தருகின்றன.

**38. மதிப்புக் கூட்டுப் பொருள்:**

- பதநீரிலிருந்து தயாரிகப்படும் பொருட்கள் மதிப்புக்கூட்டுப் பொருள்கள் ஆகும். அவை,
  - கருப்பட்டி
  - பனங்கற்கண்டு

**பிரிவு – 3**

- **எவையேனும் மூன்றனுக்கு விடை தருக.** (3 x 4 = 12)

**39 அணி** : வேற்றுமை அணி

- **அணி இலக்கணம்** : எடுத்துக்கொண்ட இரு பொருள்களின் ஒற்றுமையைக் கூறிப் பின்னர் அவற்றின் வேற்றுமையைக் கூறுவது.
- சான்று : தீயினாற் சுட்டபுண் உள்ளாறும் ஆறாதே
  நாவினாற் சுட்ட வடு
- **அணிப் பொருத்தம்** : தீயினால் சுட்ட புண்ணும், நாவினால் சுட்ட வடுவும் சுடுதலால் ஒற்றுமையுடையன. புண் ஆறும். வடு ஆறாது என்பது வேற்றுமை.

**(அல்லது)**

**பிறிது மொழிதலணி :**

- **அணி இலக்கணம்** : கூறக் கருதிய பொருளை நேரே கூறாமல், பிறிது ஒன்றைக் கூறி, அதன் மூலம் விளக்குவது. அதாவது, உவமானத்தைக் கூறி உவமேயத்தைப் பெற வைப்பது.
- **சான்று** : பீலிபெய் சாகாடும் அச்சிறும் அப்பண்டம்
  சால மிகுத்துப் பெயின்.
- **அணிப் பொருத்தம்** : "இலேசான மயிலிறகை அளவுக்கு அதிகமாக ஏற்றினால், வண்டியின் அச்சு முறிந்து விடும்" என்னும் உவமையைக் கூறி, "வலிமை

இல்லாதவராயினும் பலர் ஒன்று சேர்ந்தால், வலிமை பொருந்தியவனையும் அழித்திட இயலும்" என்னும் பொருளைப் பெறவைத்தமையால், பிறிது மொழிதலணியாகும்.

**40 இலக்கியநயம் பாராட்டுக.**

எதுகை : பெண்ணுக்கு, மண்ணுக்கு, கண்கள், பெண்கள்

மோனை : பெண்ணுக்கு, பேணி, மண்ணுக்குள்ளே, மாதர்

அணி : இயல்பு நவிற்சி அணி, உருவகம்

சுவை : பெருமிதச்சுவை

**41 பழமொழியை வாழ்க்கை நிகழ்வாக எழுதுதல்**

பழமொழி விளக்கம் 1 மதிப்பெண்

**வாழ்க்கை நிகழ்வு – 3 மதிப்பெண்**

அ) ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையாது

ஆ) அகத்தின் அழகு முகத்தில் தெரியும்

**42 தமிழாக்கம்**

1) கல்வி ஓர் ஆற்றல் வாய்ந்த கருவி. அதைக் கொண்டு உலகை மாற்றலாம்.
2) இயற்கை அழகை ரசிப்பது மனதைத் தூய்மைப்படுத்துவதற்கான முதல் படியாகும்.
3) கண்ணுக்குக் கண் என்ற சொல் இந்த உலகத்தை குருடாக்கிவிடும்.
4) இந்த உலகை அணுகும் விதத்தைக் கண்டிப்பாக மாற்ற வேண்டும்.

**43 அச்சுப்படி திருத்துபவரின் பணிகள்**

- மூலப்படியில் உள்ளபடியே செய்திகள் அச்சாகியுள்ளனவா ? என்று ஒவ்வொரு வரியையும்படித்துக் கவனித்தல்வேண்டும்
- செய்தியின்உள்ளடக்கம், புள்ளிவிவரங்கள், எண்கள், அட்டவணைகள் முதலியன விடுபட்டுள்ளனவா என்பதை மூலப்படியோடு ஒப்பிட்டுக் கவனித்தல் இன்றியமையாதது. ஏனெனில், புள்ளி விவரங்கள் மாறினால்செய்தியின்பொருளில் முரண்பாடு ஏற்படும்.
- அச்சுப்படி திருத்துவோர் செய்தியின் உருவையோ உள்ளடக்கத்தையோ மாற்றுதல் கூடாது.
- பிழை ஏற்பட்ட சொல்லின் மீது எழுதுதல் கூடாது. ஒரு வரியின் இடப்பக்கப் பாதியில் பிழை இருந்தால் இடப்பக்க ஓரமும் வலப்பக்கப் பாதியில் பிழை இருந்தால் வலப்பக்க ஓரமும் திருத்தம் தருதல் அச்சிடுவோர்க்குப் பயனுடையதாக அமையும்.
- பிழைகளை ஓரம்வரை கோடிழுத்துக் காட்டும்போது, மேலும் கீழும் உள்ள வரிகள் பாதிக்கப்படாமல் பார்த்துக் கொள்ளுதல் வேண்டும்.
- ஒரு வரியில் ஒன்றுக்கும் மேற்பட்ட பிழைகள் இருந்தால் பிழைகளைக் குறிக்கும் கோடுகளைத் தெளிவாகக் காட்டல்வேண்டும்.
- ஒரு சொல்லில் பிழைகள் பல இருந்தால் அச்சொல்லையே நீக்கிவிட்டுச் சரியான சொல்லைத் தெளிவாகப் பக்க ஓரத்தில் தருதல் வேண்டும்.
- எண்ணின் இடையில் பிழையிருந்தால் அந்தத் தொகையை முழுவதுமாகப் பிழையின்றி எழுதிக்காட்டுதல் நல்லது.
- அச்சுப்படியில் இருக்கும் வண்ணத்திற்கு மாறான வண்ணமுடைய மையால் திருத்துதல் வேண்டும். இது பிழைகளைத் தெளிவாகக் கண்டறிய உதவும்.



Kindly send me your questions and answerkeys to us : Padasalai.net@gmail.com

**பகுதி – IV** **3 X 6 = 18**

**44. நன்னூல் பொதுப்பாயிரம், சிறப்புப்பாயிரம் வாயிலாக அறியலாகும் செய்திகள்:**

**பாயிரம் :**

- நூலை உருவாக்கும் ஆசிரியரின் சிறப்பையும் அந்நூல் வழங்கும் கருத்து வளத்தையும் தொகுத்து நூல் முகப்பில் வைக்கும் முறை பற்றிப் பேசுவது பாயிரமாகும்.
- பாயிரம் (1) பொதுப்பாயிரம் (2) சிறப்புப் பாயிரம் என இரு வகைப்படும்.

பொதுப்பாயிரம்:

- எல்லா நூல்களின் முன்பும் பொதுவாக உரைக்கப்படுவது பொதுப்பாயிரம் எனப்படும்.
- நூலின் இயல்பு
- ஆசிரியர் இயல்பு
- கற்பிக்கும் முறை
- மாணவர் இயல்பு
- கற்கும் முறை என்னும் ஐந்தையும் கூறுவது பொதுப்பாயிரம் ஆகும்.

சிறப்புப்பாயிரம்:

- தனிப்பட்ட சில நூல்களுக்கு மட்டும் சிறப்பாகக் குறிப்பிடப்படுவது சிறப்புப்பாயிரம் எனப்படும்.
- நூலாசிரியர் பெயர்
- நூல் பின்பற்றிய வழி
- நூல் வழங்கப்படுகின்ற நிலப்பரப்பு
- நூலின் பெயர்
- தொகை, வகை, விரி என்பவற்றுள் இன்னதில் இயற்றப்பட்டது என்னும் யாப்பு.
- நூலில் குறிப்பிடப்படும் கருத்து
- நூலைக் கேட்போர்
- நூலைக் கற்பதனால் பெறுகின்ற பயன்
- இவற்றுடன் நூல் இயற்றப்பட்ட காலம்
- அரங்கேற்றப்பட்ட அவைக்களம்
- இயற்றப்பட்ட காரணம் ஆகியவற்றைச் சேர்த்து கூறுவதும் உண்டு. ஆகிய செய்திகளையும் செம்மையாகத் தெரிவிப்பது சிறப்புப் பாயிரத்தின் இலக்கணம் ஆகும்.

**(அல்லது)**

**பாரதிதாசன் ஒரு ‘புரட்சிக்கவி’ :**

**உதாரன் புரட்சிக்கவி:**

- வடமொழியில் எழுதப்பட்ட ‘பில்கண்யம்’ காவியத்தைத் தழுவிப் பாரதிதாசன், ‘புரட்சிக்கவி’யைப் படைத்துள்ளார். அதில் புரட்சிக்கவியாக இடம் பெற்றவன் ‘உதாரன்’.
- தனி மனித ஆட்சியை, ஆதிக்கத்தை அழித்து, உதாரன் மக்களாட்சியை நிறுவுகிறான். அதற்கு அவன் ஆற்றிய வீரவுரைகளே காரணம். அவ்வுரைகள் அத்தனையும் பாரதிதாசன் சிந்தையில் உருவானவையே என்பதைக் கற்போர் உணரமுடியும்.

**வாய்ப்பைப் பயன்படுத்தும் உதாரன் :**

- தொழுநோயாளி என அறிமுகப்படுத்தப்பட்ட இளவரசி அமுதவல்லிக்கு, பார்வையற்றவனாகக் கூறப்பட்ட கவிஞன் உதாரன் கவிதை எழுதும் கலையைக் கற்பிக்கத் தொடங்கினான். அவர்கள் இறுதியில் காதலர்களாயினர். அதனால், மரண தண்டனைக்கு உள்ளாகி இருவரும் கொலைக்களம் கொண்டு செல்லப்பட்டனர். அங்கே கிடைத்த வாய்ப்பைத் தனதாக்கிப் புரட்சிக்காரனாகிறான் கவிஞன். இங்குக் கவிஞன் உதாரனின் முழக்கமெல்லாம், பாவேந்தரின் கருத்துகளே என்பதில் ஐயமில்லை!

ப.க.சுரேசு, முதுகலைத்தமிழாசிரியர், அரசு மேல்நிலைப் பள்ளி, நெரூர். கரூர். 9942141968

Kindly send me your questions and answerkeys to us : Padasalai.net@gmail.com

இளவரசி அமைச்சரை நோக்கிக் கூறிய, 'மந்திரியே நீதி நன்று'' , ''உயிர் எமக்கு வெல்லமன்று'' என்னும் தொடர்களும் பாவேந்தர் மொழிகளே!

- பாட்டாளி மக்களின் உழைப்பால் விளைந்த நலன்களை, உதாரன் பட்டியலிடுகின்றான்! ''பாழ் நிலத்தை அந்நாளில் புதுக்கியவர் யார்'', ''பயன்விளைக்கும் நிறை உழைப்புத் தோள்கள் எவரின் தோள்கள் ?'' , ''கருவியெலாம் செய்த அந்தக் கைதான் யார் கை ?'' , ''பொற்றுகளைக் கடல் முத்தை மணிக்குலத்தைப் போய் எடுக்க அடக்கிய மூச்சு எவரின் மூச்சு ?'' இவையெல்லாம் கவிஞர் பாரதிதாசனது உணர்ச்சியின் வெளிப்பாடாகவே தோன்றுகின்றன.

**உதாரன் புரட்சியைத் தூண்டுதல் :**

- மக்கள் உள்ளத்தில் புரட்சியைத் தூண்ட விரும்பியதால் கவிஞன் உதாரன், தனக்கும் அரசனுக்கும் உண்டான வழக்கின் அடிப்படையை எடுத்துரைக்கிறான். அந்த வழக்கிற்குப் பொதுமக்களே தீர்ப்பளிக்க வேண்டும் என்பதை நினைவூட்டுகிறான்.
- ''மக்களுக்காக ஆட்சியா ? ஆட்சிக்காக மக்களா ?'' என்னும் சிந்தனையைத் தூண்டி, ''மக்களுக்காக மட்டுமே ஆட்சி இருக்க வேண்டும்'' என்பதை உறுதிப்படுத்தும் வகையில் பாவேந்தர், உதாரன் வாய்மொழியாக வைத்து, ''ஒரு மனிதன் தேவைக்கே இந்தத் தேசம் உண்டென்றால், அந்தத் தேசம் ஒழிதல் நன்றாம்'' எனக் கூறுகின்றார்.

**புரட்சிக்கவியின் தமிழ்ப்பற்று :**

- தமிழின்மேல் தமக்குள்ள பற்றுதலைப் பாவேந்தர், உதாரன் மூலமாக வெளிப்படுத்துகிறார். ''அமுது சொல்லும் இந்தத் தமிழ், என் ஆவி அழிவதற்குக் காரணமாய் இருந்தது என்று சமுதாயம் நினைத்திடுமோ ?'' அஞ்சுவதாகக் கூறி, ''என் தாய்மொழிக்குப் பழிவந்தால் சகிப்பதுண்டோ ?'' என வேதனைப்படுகிறான்.
- எனவே மக்களை நோக்கி, ''உமை ஒன்று வேண்டுகின்றேன்! மாசில்லாத உயர் தமிழை உயிர் என்று போற்றுமின்கள்'' என்கிறான். இவை அனைத்தும் பாரதிதாசன் ஒரு புரட்சிக் கவியே என்பதனை உறுதிப்படுத்துகின்றன.

**45. இயற்கையோடு இயைந்து வாழ்வு நடத்திய தமிழர்களின் வாழ்வியல் இருப்பிடங்களின் பெயர்களும் இயற்கையோடு இயைந்தே இருந்தன :**

**மனிதன் தோன்றியது மலை நிலம் :**

- மலை, மனித சமூகத்தின் ஆதி நிலமாகும். 'மலை மனிதர்கள்' எனக் கமில் சுவலபில் அழைத்த தமிழரின் பண்டைப் பதிவுகள், கடவுளையும் மலையையும் வாழ்வில் தொடர்பு படுத்துவனவாக விளங்குகின்றன. மலை, தமிழ் இலக்கியங்களில் 'குறிஞ்சி' எனக் குறிக்கப்படுகிறது. திராவிடப் பழங்குடிகளின் இனக்குழுப் பெயர்கள்மூ மலைசார்ந்த மானுடப் புவிச்சூழலை வெளிப்படுத்துகின்றன.

**இயற்கையோடு இயைந்த வாழ்வு**

- பழங்குடியினர் ஓடும் நீரையே குடிநீராகப் பயன்படுத்தினர். தம் குடியிருப்புப் பகுதியைவிட உயரமான இடத்தில் ஓடும் சிற்றாறுகள், ஓடைகளில் நீர் எடுத்துப் பருகினர். இன்றும் நீலகிரித் தோடர், எருமைக் கொட்டில்களைப் புனித இடமாகக் கருதிச் சுற்றுச்சுவர் அமைக்கின்றனர். மலை உச்சியில் அமைந்த பழங்குடித் தலைவரின் வீடு, வாழ்விட வடிவமைப்பு, வாழ்வியலில் உயரமான இடங்கள் செலுத்தும் தாக்கத்தைக் காட்டுகின்றன.

**சொல்வழக்கு :**

- சிந்துவெளி, திராவிட மலைவாழ் மக்களின் அன்றாடப் புழங்கு சொற்களின் தொடர்ச்சி சிந்திக்கத் தக்கதாகும். தென்னிந்திய மலைவாழ் மக்களிடையே மலை, மலா, மலே என்னும் சொற்கள் வழங்குகின்றன. 'மலை' (உயரமானது) , 'குன்று' (உயரம் குறைந்தது) என்னும் சொல்லாட்சி, மலை சார்ந்த மக்களிடம் வழங்குகிறது சிறப்பாகும்.

**மலைப் பெயர்களின் நீட்சி :**

- வடமேற்கு நாடுகளில் கண்டறியப்பட்ட சான்றுகள், பாகிஸ்தான், ஆப்கானிஸ்தான் நெடுமலைகளோடு பொருந்திப் போகும் திராவிடர்களின் மலைப் பெருமிதத்தின் நீட்சியாக உள்ளன. அப்பகுதிகளில் திராவிடர் வாழ்ந்த சான்றுகளை உறுதி செய்கின்றன. இவற்றால், இயற்கையோடு இயைந்த வாழ்வு நடத்திய தமிழர்களின் வாழ்வில், இருப்பிடங்களின் பெயர்களும் இயற்கையோடு இயைந்தே இருந்தமை புலப்படும்.

**(அல்லது)**

**'கல்லும் கதை சொல்லும்' – என்னும் தொடர் தஞ்சை பெரிய கோயிலுக்குப் பொருந்துவது.**

**காலத்தை வென்று நின்ற கலை.**

- ஒரு சமூகத்தின் நாகரிகம், பண்பாட்டு மேன்மைகளைப் பிரதிபலிப்பது கலை. தஞ்சைப் பெரிய கோவில் தமிழர் சமுதாயத்தின் கலையாற்றலுக்குச் சிறந்த எடுத்துக்காட்டு. அந்தக் கருங்கல் கலைச் செல்வம், காலத்தை வென்று நின்று தமிழரின் வரலாற்றுப் பெருமைகளை இன்றளவும் கதையாகக் கூறிக் கொண்டிருக்கிறது.
- தஞ்சையில் அமைந்துள்ள கோவில், இராசராச சோழனால் 11ஆம் நூற்றாண்டில் கட்டப்பட்டது. கருங்கற்களே இல்லாத நிலப்பரப்பில், கருங்கற் கொண்டு 216 அடி உயரம் உடையதாகவும், கருவரை விமானம் 13 தளங்களை உடையதாகவும் கட்டப்பட்டது.

**கதை சொல்லும் கல்வெட்டு**

- சுற்றுச்சுவரில் அமைந்துள்ள கல்வெடுச் செய்திகள், எண்ணற்ற பழமையான வரலாற்றைக் கூறுகின்றன. கதை சொல்லும் அந்தக் கற்கோவில் இசை, நடனம், நாடகம் எனப் பல அருங்கலைகளைப் பேணி வளர்த்த செய்தியைத் தன்னுள் கொண்டுள்ளது.
- கருவூலமாக, மருத்துவவமனையாக, போர்வீரர் தங்கும் கூடமாகக் கோவில் பயன்பட்ட கதைகளைக் கேட்டறிய முடிகிறது.
- இராசராசன் அமைத்த கோவிலின் முன்வாயில்கள், எண்ணற்ற வரலாற்றுக் கதைகளைச் கூறுகின்றன.

**ஓவியங்கள் கூறும் கதை**

- கோவிலின் கருவரைத் தளங்களில் உள்ள சுற்றுக்கூடம், சாந்தார நாழிகைப் பகுதிச் சுவர்களில் தட்சிணாமூர்த்தி ஓவியம், சுந்தரர் வரலாறு, திரிபுராந்தகர் ஓவியம் முதலியவற்றைப் பெரிய அளவில் வரைந்து வைத்துள்ளதை இன்றளவிலும் காணமுடிகிறது.
- கோவில் கட்டுவதில் புதிய மரபு படைத்த இராசராசன் அமைத்த சிலைவடிவங்கள் வண்ண ஓவியங்கள் என யாவும் ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே தமிழர் கலை வளர்த்ததைக் கதை கதையாக இன்றும் இந்தப் பெரிய கோவில் நமக்கு கூறுகிறது.

**வரலாற்றுக் கதை**

- ஆண்களே அன்றிப் பெண்களும் அதிகாரிகளாகப் பணிபுரிந்த செய்திளைக் கல்வெட்டுகள் கதைபோல் பாதுகாத்து வைத்துள்ளன.
- கற்கள் கிடைக்காத காவிரிச் சமவெளியில் அமைந்த பெரிய கற்கோவில் தமிழர் சாதனையை, புகழை ஆன்மீக நம்பிக்கையை பறைசாற்றுகிறது.
- தஞ்சைப் பெரிய கோவிலை ஒருமுறை காணும்போது, கல்லும் கதை சொல்லும் என்பது தெளிவாகப் புலப்படும்.



Kindly send me your questions and answerkeys to us : Padasalai.net@gmail.com

**46.** யானை டாக்டர்

**யானைகளின் பண்பு**

- யானைகள் தம் இனத்தோடு சேர்ந்து கூட்டமாக வாழும். இவை அதிக நினைவாற்றல் கொண்டவை. ஆப்பிரிக்கப் புதர்வெளி யானைகள், ஆப்பிரிக்க காட்டு யானைகள், ஆசிய யானைகள் என்னும் மூன்று சிற்றின யானைகளே உலகில் காணப்படுகின்றன. இவை ஏறத்தாழ எழுபதாண்டுகள் உயிர் வாழும் செய்திகளை இப்புதினத்தால் அறியமுடிகிறது.

**காட்டின் பயன்கள்**

- யானைகள் ஓர் அற்புதமான படைப்பு. என்றைக்கேனும் தமிழ்நாட்டில் யானை இல்லாமல் போனால் அதற்குப்பின் நம் பண்பாட்டுக்கே அர்த்தமில்லாமல் போகும் என்பது என்பது யானை மருத்துவரின் துணிவு. நாடு வளம் செழிக்கக் காட்டு விலங்குகள் காட்டு விலங்குகள் தேவை. காட்டுயிரிகளால் காடுகளில் பல அரியவரை மரம் செடி கொடிகள் தழைத்து வளர்கின்றன. நோயுறும் விலங்குகள் அவற்றை உண்டு பலவகையில் நற்பயனளிக்கும் காடுகளை மக்கள் பாதுகாக்க வேண்டும்.

**மனிதனின் விதைப்பால் விலங்குகள் அறுவடை செய்கின்றன.**

- மனிதனின் கீழ்மையான செயல்களால் யானைகளின் மரணங்கள் நிகழ்கின்றன. சுற்றுலா என்னும் பெயரில் காட்டுக்குள் புகுவோர், படித்தவர்கள்கூடக் குடித்துவிட்டுக் குப்பிகளை எறிகின்றனர். நெகிழிப் பொருள்களை விட்டு வருகின்றனர். மென்மையான பாதத்தை உடைய யானைகள் உடைந்த குப்பிகளின்மேல் கால்பதித்து, உடைந்த புட்டிகள் கால்களுக்குள் புதைவதால் கால் வீங்கி சீழ் வைத்து இறக்கின்றன.

**யானை வைத்தியம்**

- பழகிய யானைகள் அசையாமலிருந்து வைத்தியம் செய்து கொள்ளும். கூடி வாழும் இயல்புடைய யானைகள் இன்பத்திலும் துன்பத்திலும் இணைந்ததே இருக்கும் என்பதை மருத்துவர் சுட்டுவதால் அறியமுடிகிறது. யானைகள் முகாமில் துதிக்கைகளை உயர்த்தி ஒலி எழுப்பி வரவேற்றது, அவை நன்றி மறவாதவை என்பதை உணர்த்தும். குட்டி யானை ஒன்று 300 கிலோமீட்டர் கடந்து தேடி வந்து மருத்துவம் செய்து கொண்டதை அறியும்போது வியப்பாக இருக்கிறது. சிறுதகவல்களைக் கூட யானை மறப்பதில்லை. வன உயிர்களின் பண்பு, பாரட்டத்தக்க செயல்பாடுகளை உடையன. இப்படிப்பட்ட கதைகளை, வரலாறுகளைப் படித்த பின்னராவது மனிதன் மரங்களை வெட்டுவது, விலங்குகள் குடியிருப்புகளை ஆக்கிரமிப்பது, அவற்றின் வாழ்விடங்களை மாசுப்படுத்துவது என்னும் செயல்களைக் கைவிட வேண்டும். நாம் நலமாக வாழ விரும்புவதுபோலப் பிற உயிரினங்களையும் மகிழ்ச்சியாக வாழ விடவேண்டும். உலகின் நல வாழ்வுக்கு விலங்குகளின் வாழ்வும் இன்றியமையாதது என்பதை யானை டாக்டர் கதைவாயிலாக அறியமுடிகிறது.

**(அல்லது)**

**பிம்பம் கதையின் வாயிலாகப் பிரபஞ்சன் தெளிவுபடுத்தும் மனிதமுகங்கள்**

**முகமூடி அணிதல் மனித இயல்பு**

- மனிதன் ஒருவன் மற்றவர் இயல்புக்கு ஏற்பத் தன்னை மாற்றிக் கொள்ளும்போது, அவன் அவனாக இருப்பத்தில்லை. அவ்வேளைகளில் அவரவருக்கு ஏற்ப வெவ்வேறு முகமூடியை அணிந்துகொள்கிறான். இதனை நடிப்பு என்று கூறுவதா? பிழைக்கத் தெரிந்த வழி என்பதா? சில சமயங்களில் மனிதன், இப்படி அடிக்கடி முகமூடியை மாற்றி மாற்றி வாழ்வதால், அவனது உண்மைத் தன்மையை, உண்மை முகத்தையே இழந்துவிடுகிறான். அதனால் சமுதாயத்தில் அடையாளம் தெரியாமல் போய்விடுகிறான்.

**வேண்டாத விருந்தினர்.**

- பிம்பம் கதையைப் பிரஞ்சன், தம்மையே முன்னிலைப்படுத்திக் கொண்டு எழுதுகிறார். காரணம் ஏதுமின்றி எந்த நேரத்திலும் அது வெளிவருகிறது. தன் கட்டளைக்கு

உடன்படாமல், வீட்டில் உரையாடி மகிழ்வதற்கு என்றில்லாமல், விரும்பும்போது இம்சிக்க வருவதுபோல் இருக்கிறது. அது வேண்டாத விருந்தாளியாகத் தன் விருப்பம்போல் சுற்றி அலைந்து எதையும் துருவித்துருவிக் கேட்கிறது. மென்று துப்பிய எலும்பைக் கூட விட்டுவைக்காமல் ஆராய்கிறது. இதை ஏன் மறைத்து வைக்காமல் போனோம் என எண்ணத் தூண்டுகிறது. கிழிந்த துணியைக்கூட ஆராய்கிறது எனத் தொடங்குகிறது.

**கேள்விகளால் துளைத்தல்**

- மனிதன் தன்னையும் தன் மனச்சாட்சியையும் ஏமாற்றுவதை வெளிப்படச் செய்கிறது. மனிதனின் ஆக்கங்கள் அனைத்தும் விகசிப்புகள் என உணர்த்துகிறது. நிதானமாக எண்ணிப்பார்த்தால், ஒரு மனிதன் எத்தனை வண்ணங்களில், வெவ்வேறு அளவுகளில், பல்வேறு கோணங்களில், பல முகங்களோடு வாழ்வது வெளிப்படும். எதிரில் உள்ளவர் தாயானாலும், அவர் காட்டும் முகபாவத்திற்கு ஏற்பத் தன் முகபாவத்தை மாற்றிக் கொள்ளும் மனிதர்கள்தான் உள்ளனர். அம்மா, மனைவி, சித்தி, அப்பா என எவராயினும் அவரவரும், தன் எதிர் இருப்பவருக்கு ஏற்ப முகபாவத்தை மாற்றிக் கொள்வதுபோல் தன் முகபாவத்தையும் மனிதன் மாற்றிக் கொள்கிறான்.

**முகங்களின் குவியல்**

- ஒவ்வொருவர் காலடியிலும் பல முகங்கள் குவிந்து கிடக்கின்றன. அவற்றில் தேவையானதைத் தேவையானபோது பயன்படுத்திக் கொள்வதே சகஜம். இத்துணை நிகழ்வுகளுக்கும் விவாதங்களும் பிறகு வந்த பிம்பம் விடைபெறுவதோடு பிரபஞ்சன் பிம்பம் கதையை முடித்துள்ளார். விடைபெறும் பிம்பத்தால் சொந்த முகம் என்று எதுவும் மனிதனிடம் இல்லை என்பது தெளிவுப்படுகிறது.

**மனசாட்சி**

- ஒவ்வொரு மனிதனிடமும் அவன் அவனுக்குரிய விருப்பு வெறுப்புகள் உள்ளன. எனினும், பிறருடன் உறவு பாராட்டும்போது, அவரவர் இயல்புக்கு ஏற்பத் தன்மை மறைத்து, மாற்றிக் கொள்கிறான். எனினும், அவனவன் மனசாட்சி என்பது, உண்மையை நினவூட்டிக் கொண்டே இருக்கும். இவ்வகையில் மனிதன் வாழ்க்கையில் இப்படி முகம் மாற்றி முகம் மாற்றி தன் உண்மை முகத்தை இழந்து, அடையாளமற்ற தன்மையில் காட்சியளிக்கிறான்.

## பகுதி – V

**47. அடிபிறழாமல் செய்யுள் வடிவில் எழுதுக. (4 + 2 = 6)**

**யுகத்தின் பாடல்**

ஏடு தொடக்கி வைத்து என்னம்மை
மண்ணிலே தீட்டித்தீட்டி எழுதுவித்த
விரல்முனையைத் தீயிலே தோய்த்து
திசைகளின் சுவரெலாம்
எழுதத்தான் வேண்டும்
எழுகின்ற யுகத்தினோர் பாடலை.

–சு. வில்வரத்தினம்.

ஆ) தாளாற்றி தந்த பொருளெல்லாம் தக்கார்க்கு
வேளாண்மை செய்தற் பொருட்டு.